தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 9, பிரஜோற்பத்தி - திருவள்ளுவர் ஆண்டு 2022
1991, செப்டம்பர் 25, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை."

பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து, அவற்றை நீக்கிடும் ஆற்றல் மிக்க வினைத் திறனோடு செயல் படுவதே வரவேற்கத்தக்கதாகும்.

1. வினாக்கள் - விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள்.— வினா எண் 68. திரு சோ. இராசாராமன், திரு. ஓ. எஸ். அமர்நாத், திரு. கே. ஆர். முருகானந்தம், திரு. ஆ. சுப்பு ரத்தினம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

இதையொட்டிய பொருள் பற்றியதாகவே அடுத்த வினாவும் இருக்கிறது. எனவே அடுத்த வினாவும் இதோடு சேர்த்து எடுத்துக்கொள்ளப்படுகிறது.

வினா எண் 69. திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள். இரு கேள்விகளுக்கும் சேர்த்தே பதில் சொல்லலாம்.

மதுரையில் உயர் நீதிமன்றத்தின் பிரிவு அமைத்தல்.

1085. திரு. சோ. இராசாராமன்:

68-திரு. ஓ. எஸ். அமர்நாத்:

68.திரு. கே. ஆர். முருகானந்தம்:

68.திரு. ஆ. சுப்புரத்தினம்.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரில் உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நேற்று இரவே மானியக் கோரிக்கையின் போது மதுரையில் உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு பிரிவை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளையும், வாய்ப்புகளையும் தெளிவாகவே வெளியிட்டிருக்கிறேன். நேற்றையதினம் எனக்குக் கிடைத்த மேலும் ஒரு நல்ல செய்தி சென்னை உயர் நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதி 3 நீதிபதிகளை நியமித்து, மீண்டும் அதனுடைய சாத்தியக் கூறுகளை, மதுரை சென்று நீதிபதிகள் தங்குகிற இடம், அதனுடைய வசதிகளை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு அனுப்புவதாக தகவல் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, இது துரிதப்படுத்தப்படும் என்பதையும் அந்த நல்ல செய்தியையும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 69.

69—திருச்சியில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு அமைத்தல்.

*1816 திரு. ம. சின்னச்சாமி :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) உயர்நீதிமன்றத்தின் பிரிவு திருச்சியில் ஏற்படுத்துமாறு மைய அரசுக்கு பரிந்துரை செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உயர்நீதிமன்றத்தினுடைய பெஞ்ச் உருவாக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இப்போது அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் அமைப்புச் சட்டம் 226-வது பிரிவின்படி மதுரையில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றால் மத்திய அரசினுடைய ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். மத்திய அரசு ஒப்புதல் வழங்கிவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பெற்றிருக்கிறது. துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.